REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 19உ புதன் (4—12—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 20உ வியாழன் (5—12—57) [இதழ் 148

சென்னை, ஆந்திர மாநிலங்கள் வாழ்க!

அரிசி உற்பத்தி அதிகரித்திருப்பதாக அமைச்சர் கூற்று

புதுடில்லி, டிச. 3—

"1952—53-ம் ஆண்டுக்குப் பிறகு ஆந்திர மாநிலத்தில் அரிசி உற்பத்தி 50 சதவிகிதம் அதிகரித்திருக்கிறதாம்!

சென்னை மாநிலத்தில் 80 சதவிகிதம் அதிகரித்திருக்கிறதாம்! இவ்வாறு கூறிய உணவு மந்திரி ஜெயின், 'ஆந்திரத்தின் புகழ் வாழ்க! சென்னையின் புகழ் வாழ்க! மேலும் மேலும் வெற்றி பெறுக!' என்று வேறு வாழ்த்தினாராம்!

அடக்குமுறை ஆயுதத்தைப் புதுப்பிக்க டெல்லி முடிவு

தடுப்புக்காவல் சட்டம் மேலும் மூன்றாண்டுகளுக்கு நீடிக்குமாம்

புதுடில்லி, டிச. 3—

1950-ம் ஆண்டு தடுப்புக்காவல் சட்டம் 1957 டிசம்பர் 31-ந் தேதியுடன் காலாவதியாகிறது.

அதனை மேலும் மூன்றாண்டுக் காலத்திற்குப் புதுப்பிக்கப் போகிறார்களாம்.

இதற்கான மசோதா, இன்னும் இரண்டு நாளில் மக்கள் சபையில் கொண்டுவரப்படுமாம். முன்பெல்லாம் சட்டத்தினை ஒன்று அல்லது இரண்டாண்டுக் காலத்திற்கு நீடிக்கவேண்டும் என்றே சர்க்கார் கோரி வந்திருக்கிறது; ஆனால் இம்முறை, ஒரேயடியாக மூன்றாண்டுக் காலத்திற்கு நீடிப்பு வேண்டுமென சர்க்கார் கோருகிறது என்றும், இம்மாதிரிக் கோருவது இதுவே முதன் முறை என்றும் கூறப்படுகிறது.

அடக்குமுறைக் கொள்கை!

7000 இந்தியர்கள் வெளியேறி விட்டனராம்!

புதுடில்லி, டிச. 3—

போர்ச்சுகீசிய சர்க்காரின் அடக்குமுறையைத் தாங்க முடியாமல் 1954-ம் ஆண்டிலிருந்து இதுவரையில் 7,000 இந்தியர்கள் கோவாவிலிருந்து வெளியேறி வந்திருப்பதாக மக்கள் சபையில் பண்டித நேரு தெரிவித்துள்ளார்.

டச்சு ஏகாதிபத்தியத்திற்கு எதிராக இந்தோனேஷியாவில் ஆர்ப்பாட்டம்

நியூகினியா தீர்மானம் ஐ. நா.-வில் தோற்றதின் எதிரொலி

ஜகார்தா, டிச. 3—

டச்சு நியூகினியா தங்களுக்குச் சேரவேண்டியது என்பதால், அதனைப் பெறுவதற்காக நெதர்லாந்து சர்க்கார் தங்களுடன் பேச்சு வார்த்தை நடத்த ஐ. நா. சபை சிபாரிசு செய்யவேண்டும் என்ற இந்தோனேஷிய சர்க்காரின் தீர்மானம் தோற்றுப்போனதை ஒட்டி, இந்தோனேஷியாவில், டச்சுக்காரருக்கு எதிரான உணர்ச்சி கொழுந்துவிட்டெறியத் துவங்கியுள்ளது.

ஆயிரக்கணக்கான இந்தோனேஷியத் தொழிலாளர்கள், இந்தோனேஷியாவில் உள்ள மிகப் பெரிய டச்சு வர்த்தக நிறுவனங்களுள் ஒன்றினை—கே. பி. எம். ராயல் டச்சு கப்பல் கம்பெனியை—கைப்பற்றி, ஜகார்தாவின் பிரதான இடத்திலிருக்கும் கம்பெனியின பெரிய மாளிகையில், தங்களது தேசீயக் கொடியை ஏற்றியுள்ளனர் என்று தெரியவருகிறது.

இந்தோனேஷியக் குடியரசின் பெயரால் தாங்கள், அந்த டச்சு கம்பெனியைக் கைப்பற்றியிருப்பதாக தொழிலாளர் பிரதிநிதி ஒருவர் கூறியிருக்கிறார்.

இந்தக் கம்பெனி, இந்தோனேஷியாவின் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தீவுகளிடை நடைபெறும் கப்பல் போக்குவரத்தின் பெரும் பகுதியை நிர்வகிப்பதாகும்.

கம்பெனியின் அதிகாரிகள், கம்பெனியைக் கைப்பற்றிய தொழிலாளரிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க மறுத்ததின்பேரில், அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கின்றனர்.

வேலைநிறுத்தம்

இந்தோனேஷியா முழுவதும் நேற்று ஒருநாள் பரிபூரணமான வேலைநிறுத்தம் நடைபெற்றிருக்கிறது.

டச்சுக்காரருக்குச் சொந்தமான பாங்கிகள், வர்த்தக நிலையங்கள், காப்பி, தேயிலை, இரப்பர் தோட்டங்கள் இங்கெல்லாம் வேலைசெய்யும் ஆயிரக்கணக்கான இந்தோனேஷியத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்தோனேஷியாவில் உள்ள டச்சுக்காரருக்கு— தூதுவராலுவலகத்தைச் சேர்ந்தவர்களுக்குங்கூட —தண்ணீர் சப்ளை நிறுத்தப்பட்டதாக ஒரு பத்திரிகை கூறியிருக்கிறது. இது, டச்சுக்காரருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் 'பகிஷ்கரிப்பு'த் திட்டத்தின் ஒரு பகுதி என்றும் கூறப்படுகிறது.

இந்தோனேஷியாவில் டச்சுக்காரருக்குச் சொந்தமான நிறுவனங்கள் மூலம் ஆண்டுதோறும் 50 முதல் 100 கோடி கில்டர் (அதாவது 4.7 முதல் 9.4 கோடி பவுன்) இலாபம் கிடைக்கிறது என்றும், இது நெதர்லாந்தின் தேசிய வருமானத்தில் மூன்று சதவிகிதம்என்றும்கூறப்படுகிறது

இந்தோனேஷியாவை நோக்கி டச்சு யுத்தக் கப்பல் விரைகிறது

திஹேக், டிச. 3—

டச்சு யுத்தக் கப்பல் ஒன்று, டச்சு நியூகினியாவிற்கு உடனடியாக விரைகிறதாம்!

'வெர்ஸ்டன்' என்ற அந்த 1,796 டன் யுத்தக் கப்பல், அவ்வாறு அனுப்பப்படுவதற்கான காரணம் எதுவும் கூறப்படவில்லை.

ஆனால், இந்தோனேஷியாவில் வாழும் சுமார் 60,000 டச்சுக்காரர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்கான முன்னேற்பாடுகளை தாங்கள் செய்ய வேண்டியிருப்பதாக டச்சு சர்க்கார் கூறியிருக்கிறதாம்!

'நான் நாடு திரும்புவதற்கு அனுமதிக்கப்படவேண்டும்'

'இன்றேல் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை'

சைப்ரஸ் விடுதலைப் போராட்டத் தலைவர் கண்டிப்பு

ஐ. நா. டிச. 3—

"நான் நாடு கடத்தப்பட்டிருக்கும் நிலையில், பிரிட்டிஷ் சர்க்காருடன் எப்படிப் பேச்சுவார்த்தை நடத்தமுடியும்?

"நான் சைப்ரஸ் மக்களைச் சந்தித்தாகவேண்டும்; அவர்களுடன் ஆலோசனை நடத்தவேண்டும்; அதன் பின்னரே பேச்சு வார்த்தைகள் நடத்துவது என்பது சாத்தியமாகும்.

"நாடு கடத்தப்பட்ட நிலையில் நானிருந்துகொண்டு, பிரிட்டிஷாருடன் பேச்சுவார்த்தை நடத்துவது சமதையான அந்தஸ்துடன் நான் நடத்தப்படுவதாக ஆகாது.

"நான் நாடு திரும்பும் வரையில், எந்த சைப்ரஸ் குடிமகனும் பிரிட்டிஷாருடன் பேசுவதற்கு இணங்கமாட்டான்"

—என்று, சைப்ரஸ் விடுதலைப் போராட்டத் தலைவரான மகாரியஸ் பாதிரியார் கூறியிருக்கிறார்.

இந்திய பிரஸ் டிரஸ்ட் நிருபருக்கு அவர் தந்த பேட்டியின் போதுதான் மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஐ. நா. சபையில் அடுத்த வாரம் சைப்ரஸ் பற்றி நடைபெறும் விவாதத்தைக் காண அவர் இங்கு வந்துள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது:— "இந்தியாவின் தார்மீக ஆதரவு எங்களது சுதந்திரக் கிளர்ச்சிக்கு வேண்டும்; ஏனெனில், எங்களது உணர்ச்சிகளை இந்தியா நன்கு புரிந்துகொள்ள முடியும்; இந்தியாவும் ஒரு காலத்தில் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திலிருந்துவிடுபட வெற்றிகரமான போராட்டம் நடத்தியதுதான்.

"நான் நேருவை—பாண்டுங்கிலும், கிருஷ்ணமேனனைப் பல தடவைகளிலும் சந்தித்துப் பேசியிருக்கிறேன்; அவர்கள் சைப்ரஸ் பிரச்சினைக்கு நியாயமான—ஜனநாயகபூர்வமான பரிகாரம் காணுவதில் அக்கறை கொண்டிருக்கின்றனர் என்பதை அறிவேன்."

தொடர்ந்து மகாரியஸ் பாதிரியார், கூறியதாவது:—

"சர் ஜான் ஹார்டிங் என்பவருக்குப் பதிலாக சர் ஹுக்புட் என்பவர் சைப்ரசின் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார்; இவரும் ஹார்டிங்கைப் போலவே நடந்து கொண்டால், சைப்ரஸ் மக்கள் தங்கள் கோரிக்கைகள் ஈடேறும் வரை வாளாவிருக்கமாட்டார்கள்; சைப்ரசில் நிலைமை தொடர்ந்து அமைதியற்றதாகவே இருக்குமென நான் அஞ்சுகிறேன்."

யுத்தகாலம் போல உணவுக் கட்டுப்பாடு

ஒருபோதும் புகுத்தப்பட மாட்டாதாம்!

மத்திய உணவு மந்திரி ஜெயின் கூறுகிறார்

புதுடில்லி, டிச. 3—

பெரிய, இடைநிலை நீர்ப்பாசனத் திட்டங்களில் மிச்சப்படுத்தப்படக் கூடிய தொகை முழுவதையும் சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகச் செலவழிக்கப் போகிறார்களாம்!

தகவலை உணவு மந்திரி ஏ. பி. ஜெயின் மக்கள் சபையில் வெளியிட்டாராம்!

"யுத்த காலத்தில் மக்கள் அனுபவித்ததைப் போன்ற உணவுக் கட்டுப்பாடு, ஒருபோதும் புகுத்தப்படாது" என்றும் அவர் கூறினாராம்!

சர்க்கார் உணவுப் பொருள் வர்த்தகத்தைத்தான் கட்டுப்படுத்தி வருகிறது என்றும், தொடர்ந்து வியாபாரிகள் சூதாட்டநோக்குடன் விலை ஏற்றத்திற்குமுயற்சிப்பார்களானால், வர்த்தகத்தில் கைவைக்க சர்க்கார் தயங்காது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பம்பாய், சென்னை, பீகார் முதலிய மாநிலங்களிலிருந்து கோவா, இலங்கை பாகிஸ்தான் ஆகிய இடங்களுக்கு உணவுப் பொருள்கள் கள்ளத்தனமாகக் கடத்தப்படுவதைத் தடுக்கவும் சர்க்கார் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை அவர் விவரித்தாராம்!

ஹங்கேரியில் களையெடுப்பு?

பிரதமர் காதருக்கு கல்தா?

புதாபெஸ்ட், டிச. 3—

ஹங்கேரியின் இப்போதையப் பிரதமர் ஜெனோஸ் காதருக்குச் சீட்டுக் கிழிக்கப்படவிருப்பதாக இங்கு கம்யூனிஸ்டு கட்சி வட்டாரங்களில் வதந்தி உலவுகிறதாம்.

முதல் துணைப் பிரதமராக இருக்கும் டாக்டர் பொரமுன்னெச் என்பார் புதிய பிரதமராவார் என்றும், காதர், கட்சியின் பொதுச்செயலாளர் பதவியுடன் திருத்தியடைய வேண்டியிருக்கும் என்றும் பேசிக்கொள்ளப்படுகிறதாம்.

தென்னவரை ஏமாற்ற இப்படி ஒரு தந்திரமா?

புதுடில்லி, டிச. 3—

வடநாட்டு மாநிலங்களுக்கும் தென்னாட்டு மாநிலங்களுக்கும் உணவுத் துறையில் மத்திய சர்க்கார், ஒரே வகையான அளவே உதவி செய்து வருகின்றனராம்!

மக்கள் சபையில் சிலர், தென்னாட்டிற்கு ஆதரவாகவும், வட கிழக்கு மாநிலங்களுக்கு வஞ்சக நோக்குடனும் மத்திய சர்க்கார் நடந்துகொண்டதாக கதை கட்டினராம்!

இதை மறுத்துரைத்தாராம், மந்திரி!

நம் நாடு

சென்னை 4—12—57 புதன்

நெசவாளர்களுக்கு மீண்டும் தொல்லை

கைத்தறியாளர்களுக்கு வாழ்வை செய்வது என்ற பெயரால், ஆண்டுக்கு ஒருமுறை கைத்தறி வாரம் கொண்டாடப் பட்டுவருகிறது.

கைத்தறியாளர்களைக் கூட்டுறவு அமைப்பில் சேர்த்து, அவர்கள் தொழில் நடத்துவதற்கான வசதிகள் செய்யப் பட்டு வருகின்றன.

கைத்தறியாளர்கள் உற்பத்திச் செய்யும் துணி கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு பட்டு வருகிறது.

கைத்தறியாளர்களுக்கு வாழ்வு தேடித்தருவது என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள கூட்டுறவு உற்பத்தி விற்பனை நிலையங்களில் பணிபுரிந்துவருகின்றவர்களுக்கும், அவர்களைக் கண்காணித்து வருகின்றவர்களுக்கும் பெருந் தொகை செலவிடப்பட்டுவருகிறது.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கென்றே கூட்டுறவு தனித்துறையொன்று பணியாற்றிவருகிறது.

இவ்வளவிற்கும் மேலாக, கைத்தறித் துணியை மக்கள் விரும்பி வாங்க வேண்டும் என்பதற்காக, கூட்டுறவு நிலையங்களில் விற்கப்பட்டுவரும் கைத்தறித் துணிக்கு, ரூபாய்க்கு ஒன்றரை அணா வீதம் விலைக் கழிவும் கொடுக்கப்பட்டுவந்தது.

அரசாங்கம் இதுவரை கொடுத்துவந்த விற்பனை விலைக் கழிவுத் தொகையின் அளவை, இத்திங்கள் முதல்தேதி முதல் ஒரு அணாவாகக் குறைத்துவிட்டது.

இன்னும் ஓராண்டுக் காலத்துக்குள், விற்பனை விலைக் கழிவு தருவதை அறவே நிறுத்தி விடப்போவதாக, இந்தியப் பேரரசு அமைச்சரான நித்தியானந்த கனுங்கோ இப்பொழுது அறிவித்துள்ளார்.

இவ்வாறு அறிவித்துள்ள அமைச்சர் நித்தியானந்த கனுங்கோ பொதுவாக கைத்தறி பற்றி எத்தகைய கருத்தைக் கொண்டிருப்பவர் என்பது கருதத்தக்கது.

கைத்தறியை ஒரேயடியாக அழித்துவிடவேண்டும் என்ற நோக்குடையவர் இந்த அமைச்சர்.

கைத்தறிகளை எல்லாம் விசைத்தறிகளாக மாற்றி அமைக்க வேண்டும் என்ற இலட்சியத்தை இந்தியப் பேரரசிற்கு ஏற்கனவே சிபாரிசு செய்தவர் இந்த கனுங்கோ தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இந்த அமைச்சரை கைத்தறித் தொழிலின் பெரும் வைரி எனக் கூறினும் பொருந்தும்.

கைத்தறித் துணிக்கு விற்பனைக் கழிவு தரும் முறையை அறவே கைவிட வேண்டும் என்ற யோசனையை இந்தியப் பேரரசிற்கு முதல் முதலாகக் கூறினவரும் இந்த கனுங்கோவாகத்தான் இருக்க வேண்டும்.

எது எப்படி இருந்தாலும் கைத்தறித் துணி விற்பனைக்குத் தந்துவந்த கழிவுத் தொகையின் அளவைக் குறைப்பதோ, அதை அடியோடு கைவிடுவதோ விரும்பத் தக்கதாகாது என்பதுடன் வன்மையாகக் கண்டிக்கத் தக்கதுமாகும்.

கூட்டுறவு விற்பனை நிலையங்களில் விற்கப்பட்டுவரும் கைத்தறித் துணிக்குத்தான் இந்த விற்பனைக் கழிவு கொடுக்கப் பட்டுவருகிறது.

கூட்டுறவு அமைப்பில் இடம் பெறாத நெசவாளர்கள் ஏராளமாக உள்ளனர்.

அவர்களால் உற்பத்திச் செய்யப்பட்டுவரும் கைத்தறித் துணிக்கும், இந்த விற்பனைக் கழிவுக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது.

கூட்டுறவு அமைப்பில் இடம் பெறாத நெசவாளர்கள் உற்பத்திச் செய்யும் துணியின் அளவுடன், கூட்டுறவு அமைப்பில் சேர்ந்துள்ள நெசவாளர்கள் உற்பத்திச் செய்யும் துணியின் அளவை ஒப்பவைத்துப் பார்த்தால், பின்னவர் உற்பத்திச் செய்யும் துணி, மொத்த உற்பத்தியில் மிக மிகக் குறைந்தே காணப்படும்.

இதைக் கொண்டு பார்க்குமிடத்து, கூட்டுறவு விற்பனை நிலையங்களில் விற்கப்படும் துணியின் மொத்த அளவும் குறைவு; அதற்காகத் தரப்பட்டுவரும் விற்பனைக் கழிவுத் தொகையின் அளவும் குறைவு என்பது உணரப்படும்.

மொத்த கைத்தறி துணி உற்பத்தியில் கூட்டுறவு முறையில் உற்பத்திச் செய்யப்பட்டு வரும் குறைந்தபட்ச துணிக்கு விற்பனைக் கழிவு தருவதற்கே இந்தியப் பேரரசு பின்வாங்குகிறது என்றால், கைத்தறித் துறைமூலம் உற்பத்தியாகும் மொத்தத் துணிக்கும், இந்தப் பேரரசா விற்பனைக் கழிவுத்தர ஒப்பும்? ஒருக்காலுமில்லை.

ரூபாய்க்கு ஒன்றரை அணா விற்பனைக் கழிவு கொடுத்துவந்த நிலையிலேயே, கூட்டுறவு விற்பனை நிலையங்களில் பெருந் தொகை மதிப்புடைய கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கிறது என்ற சோகச் செய்தி அடிக்கடி தரப்பட்டுவருகிறது.

விற்பனைக் கழிவுத் தொகை குறைக்கப்படுவதும், நீக்கப்படுவதும், மேற்படி தேக்கத்தைப் பெருக்கும். இதன் விளைவாக, கூட்டுறவு அமைப்பில் விருப்புடன் சேர்ந்துள்ள கைநெசவாளர்கள் வாழ்வில் மீண்டும் இருள் சூழும்.

அதுவுமல்லாது — கூட்டுறவு முறையில் நெசவாளர்களுக்கு ஏற்பட்டுவரும் நம்பிக்கையும் மெள்ளமெள்ளச் சரிந்துவிடும். கூட்டுறவு தத்துவத்தின்மீதே மக்கள் நம்பிக்கை இழப்பார். நிற்க.

கைத்தறித் திட்டத்தின் இதர ஏற்பாடுகளுக்கு பணம் தேவையாக இருப்பதால் இந்த விற்பனைக் கழிவுதருவது குறைக்கப் படுகிறது என்று இந்தியப் பேரரசின் சார்பில் காரணம் காட்டப்படுகிறது.

கைத்தறித் தொழில் காப்புக்கென இந்தியப் பேரரசிடம் சென்ற நான்கு ஆண்டுகளில் திரண்டுள்ள தொகை ரூ. 42 கோடி இருக்குமென்றும், இதில் ரூ. 17 கோடி மட்டுமே இத்துறைக்கென செலவழிக்கப் பட்டுள்ளதென்றும் நம்பப்படுகிறது.

செலவழிக்கப்படாத தொகையான 25 கோடி ரூபாயை இந்தியப் பேரரசு என்ன செய்தது?

கைத்தறியாளர்களுக்குப் புது வாழ்வு தருவதற்குத்தான் இந்த விற்பனைக் கழிவு இதுவரை தரப்பட்டுவந்தது என்ற பேரரசின் கூற்று உண்மையானதாக இருக்குமானால், இதைக் கைவிடுவதினால் நெசவாளர்கள் மீண்டும் அவதிக்குள்ளாவர் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்தியப் பேரரசின் இம்முடிவு நெசவாளர்களிடை பேரச்சத்தையும், தங்கள் எதிர்கால வாழ்வு பற்றிய பெருங் கவலையையும் உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. இதற்கு மீண்டும் ஒரு பெரும் கிளர்ச்சி, துவங்கப்பட்டால்தான் பேரரசிற்கு நல்லறிவு ஏற்படும் போலும்!

ஆதாரக்கல்வி வளர்ச்சி

எதிர்பார்த்தபடி இல்லையாம்

ஸ்ரீமன் நாரயணன் வருத்தப்படுகிறார்

தர்கி, (பீகார்) நவ. 30—

எதிர்பார்த்தபடி ஆதாரக்கல்வி வளர்ச்சி வேகமாக இல்லை என்றும், இதற்குக்காரணம் இத்துறையில் பல இடஞ்சல்கள் இருப்பதே என்றும் ஆதாரக் கல்விக்கான மத்திய நிரந்தரக் குழுவின் தலைவரும், காங்கிரஸ் பொதுச்செயலாளருமான ஸ்ரீமன் நாராயணன் இங்கு கூறியிருக்கிறார்.

அகில இந்திய ஆதாரக்கல்வி மாநாட்டின் இறுதியில் பேசிய அவர், இந்த நிலைகண்டு கவலைப் படத் தேவையில்லை என்றும், இதனைச் சீர்செய்ய மத்திய சர்க்கார் மேற்கொள்ள விருக்கிற நடவடிக்கைகளை விளக்கியும் பேசியுள்ளார்.

பஞ்சாயத்து ஊழியர்கள் ஊதிய உயர்வு

கேரள சர்க்கார் உத்தரவு

திருவனந்தபுரம், டிச. 3—

கேரள மாநிலத்திலுள்ள பஞ்சாயத்து ஊழியர்களின் ஊதியத்தை மாற்றியமைக்குமாறு கேரள அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த ஊதிய உயர்வின் காரணமாக ரூ. 18 இலட்சம் அதிகப்படியாகச் செலவாகும்.

கேரளத்தில் 800-க்கு அதிகமான பஞ்சாயத்துகள் உள்ளன. 4,000 பேர் பணியாற்றுகின்றனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பிரிவுகளுக்கு ஏற்றபடி பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளுக்கு அதிகபட்சம் ரூ. 80 முதல் ரூ. 150 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முழு நேரம் ஊர் சுத்தம் செய்பவர்களுக்குக் குறைந்தபட்சம் ஊதியம் ரூ. 20 என்றும், கிராக்கிப்படி ரூ. 22 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1—9—57 முதல் இந்த ஊதிய உயர்வு அமுலுக்கு வருகிறது.

அணுசக்தி இலாகாவை சீரமைப்பதுபற்றி சில திட்டங்கள் ஆராயப்பட்டுவருவதாக மக்கள் சபையில் பண்டித நேரு தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருள் இறக்குமதிப் பேச்சுவார்த்தைகள்

நம்பிக்கை தருகின்றனவாம்!

உணவு மந்திரியின் பெருமிதம்

புதுடில்லி, டிச. 2—

பல அன்னிய நாடுகளுடன் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக உள்ளன என்பதால், போதுமான அளவு உணவுப் பொருள் இறக்குமதிக்கு வாய்ப்புகள் உண்டு என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது என்பதாக உணவு மந்திரி ஜெயின், மக்கள் சபையில் மிக்கப் பெருமிதத்துடன் தெரிவித்திருக்கிறார்.

'இந்தச் செய்தி, திருப்திக்குரியது' என்றும் அவர் கூறினாராம்!

மக்கள்சபையில் உணவு விவாதத்தைத் துவக்கிவைத்த அவர், பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களில் நான்கிற்குக் குழு ஒன்று சென்றதாகவும், அதன் கருத்துப்படி, அந்த மாநிலங்களிலிருந்து வந்த நஷ்டக் கணக்கு மிகைப்படுத்தப்பட்டது என்றும் கூறினாராம்!

அசோக மேதா குழுவின் அறிக்கைக்கு நன்றி தெரிவித்துவிட்டு அவர், அந்த அறிக்கை இப்போது சர்க்காரின் மிகக் கவனமான பரிசீலனையிலிருந்து வருவதாகவும் கூறியிருக்கிறார்.

வாழ்க்கைச் செலவு உயர்ந்திருப்பதால்!

குற்றங்கள் அதிகரிப்பாம்!

சென்னை, டிச. 3—

"சென்னை மாநிலத்தில் குற்றங்கள் அதிகரித்துள்ளன; இதற்குக் காரணம், வாழ்க்கைச் செலவு உயர்ந்திருப்பதே" என்று 1956-ம் ஆண்டு போலீஸ் இலாகா நிர்வாக அறிக்கை கூறுகிறது.

இந்த ஆண்டில், கள்ளக் கடத்தலில் கைப்பற்றப்பட்ட பொருள்களின் மதிப்பு ரூ. 4,17,000 என்று கூறப்பட்டுள்ளது.

மதுவிலக்குச் சட்ட அமுலில் 2,30,189 வழக்குகள் பதிவாகியுள்ளனவாம்; சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு இது, 35 சதவிகிதம் அதிகமாம்.

சென்னை நகரில் போக்குவரத்து விபத்துக்கள் 2 890-லிருந்து இந்த ஆண்டில் 3,384 ஆக உயர்ந்துள்ளதாம்.

சந்திப்பர் — பேசுவர்! ஆனால்...!!

புதுடில்லி, டிச. 2—

பண்டாவும் பண்டிதரும் சந்திப்பர்!

இலங்கை 'இந்தியர்' பிரச்சினை பற்றிப் பேசுவர்!

ஆனால்...! இறுதி முடிவு எதுவும் மேற்கொள்ளமாட்டார்கள்!

இப்படி ஒரு தகவல் இங்கிருந்து தரப்படுகிறது.

சந்திக்கவும், பேசவும் நேரம் கிடைத்தாலும், முடிவெடுக்க இந்தச் சந்தர்ப்பத்தில் நேரம் கிடைக்காதாம்!

அது மட்டுமல்லவாம்; இது பற்றி உடனடியாக விவாதிக்க வேண்டுமென்கிற அளவுக்குப் பிரச்சினை ஒன்றும் அவசரமானதல்ல என்று இருவரும் கருதுகின்றனராம்!

6,667 பெண்கள்

தற்கொலை செய்துக்கொண்டனர்!

பம்பாய், டிச. 1—

6,667 பெண்கள் கடந்த 5½ ஆண்டு காலத்தில் பம்பாய் மாநிலத்தில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று மாநில முதலமைச்சர் சாவன் தெரிவித்துள்ளார்.

1952-ல் 975 பேர் மட்டுமே தற்கொலை செய்துகொண்டனர் என்றும், ஆண்டுதோறும் இந்த எண்ணிக்கை அதிகரித்து 1956ல் 1,352 பேர்களாகப் பெருகியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

காமன்வெல்த் பாராளுமன்ற மாநாடு

புதுடில்லியில் 49 நாட்டுப் பிரதிநிதிகள்

புதுடில்லி, டிச. 2—

காமன்வெல்த் பார்லிமெண்டரி மாநாடு இங்கு துவங்கியுள்ளது.

இதுபோன்ற மாநாடு, முதல் முறையாக ஆசிய மண்ணில், புதுடில்லியில்தான் நடைபெறுகிறது.

மாநாட்டிற்கு 49 நாடுகளின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் வந்துள்ளனர்.

மாநாட்டினை குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் துவக்கிவைத்திருக்கிறார்.

துணைத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன், பண்டித நேரு முதலியோரும் இன்று பேசியுள்ளனர்.

காமன்வெல்த், பல்வேறு நாடுகளையும் பிணைக்கக்கூடிய ஜனநாயக உணர்வுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டெனப் பலரும் புகழ்ந்து பேசினராம்.

சென்னையில்

தாழ்த்தப்பட்ட மாணவர்களின் பரிதாப நிலை

சென்னை, டிச. 1—

தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதி யொன்றுக்கு அரசாங்கம் மானியம்தருவதை நிறுத்திவிட்டதாம்!

அந்த விடுதி நிர்வாகிகள், வரவு—செலவு கணக்குகளை அரசாங்கத்திற்கு அனுப்பவில்லையாம்!

மானியம் இல்லாதபோது, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இடமில்லை என்று கூறப்பட்டு 61 மாணவர்கள் விடுதியிலிருந்து விரட்டப்பட்டனராம்.

அவர்கள் அனைவரும் அமைச்சர் கக்கனிடம் முறையிட்டனராம். மாணவர்களுக்கு வேறு விடுதியில் வசதி செய்து தருவதாக அமைச்சர் வாக்களித்துள்ளார் என்று தெரியவருகிறது.

அறிவுக்கண்ணைப் பெற்று வாழவேண்டுமாம்!

குருடர்கள்பற்றி பண்டிதர்

பூனா, டிச. 1—

"பிறவிக் குருடர்கள் எந்தக் காரியத்திற்கும் தடையாக இருக்கக்கூடாது. ஊனக் கண்ணை இழந்தாலும் அறிவுக் கண்ணைப்பெற்று வாழவேண்டும்"

என்று பண்டித நேரு, ஒரு பிறவிக் குருட்டுச் சிறுவன் தனக்கு ரோஜாமலர் அளித்தபோது கூறியுள்ளார்.

தொழில்-போக்குவரத்தில் புரட்சி ஏற்படுமாம்!

பணிக்கரின் வீரப் பேச்சு!

பாரிஸ், டிச. 1—

புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகளை மற்ற நாடுகளுக்கும் அறிவித்து பங்கிடு செய்துகொள்ள வேண்டுமாம்; இல்லாவிட்டால் தொழில் — போக்குவரத்தில் புரட்சி ஏற்படும் என்று பிரான்சில் இந்தியத் தூதுவராக உள்ள பணிக்கர் எச்சரித்துள்ளார்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப் பயண நிகழ்ச்சிகள்

★

ஏரகுடி :

8—11—57 இரவு 7 மணிக்கு. இங்கு நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கலியபெருமான், முத்துக்கருப்பன் ஆகியோர் பேசியபின், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், 'திராவிடத்தின் இறந்தகால நிலையும் நிகழ்கால நிலையும்' என்பதுபற்றி விளக்கி எதிர்காலத்தில் அது மேற்கொண்டிருக்கும் கடமைகளையும், பொறுப்புகளையும் எடுத்துக் கூறினார்.

பொன்னர்சங்கம்பட்டி :

கழகத் துவக்க விழா

9—11—57-ல், ஊரெங்கும் கொடிகள் ஏற்றப்பட்டு தோழர்களும், பொதுமக்களும் மிகுந்த உற்சாகமாகக் காணப்பட்டார்கள்.

மாலை 6-30 மணிக்கு, தோழர் பி. சுப்ரமணியம் தலைமையில் பொதுக்கூட்டம் தொடங்கியது. தோழர்கள் எஸ். நெடுமாறன், கலியபெருமான், முத்துக்கருப்பன் ஆகியோர் பேசியபின் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், அந்த ஊருக்கு பொன்னர் சங்கம்பட்டி என்ற பெயர் வந்ததற்குக் காரணமே, வெள்ளையனை எதிர்த்த விடுதலை வீரர்களான கட்டபொம்மன், ஊமைத்துரை, மருது சகோதரர்களைப்போல இந்த பொன்னர் சங்கம்பட்டியிலேயும் பொன்னர், சங்கரர் என்ற இரண்டு வீரர்கள் இருந்து வெள்ளையரை எதிர்த்தார்கள் என்ற காரணத்தாலேயே இந்த ஊர் அவர்கள் பேரால் அழைக்கப்படுகிறது என்ற ஆதாரத்தைக் காட்டி, அந்தகு வீரம் பொங்கி எழுந்த ஊரில் வாழ்கின்ற மக்கள் திராவிடத்தின் விடுதலைக்காகப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

திருச்சி :

10—11—57 காலை திருச்சியில் தோழர் சுப்பிரமணியம்—தோழியர் மரகதம் திருமண விழாவுக்கு தோழர் சி. பி. சிற்றரசு தலைமை வகித்து, மணவிழாவை நடத்திவைத்தார், தோழர்கள் டி. பி. அழகமுத்து. நகராட்சி மன்ற உறுப்பினர் நாகசுந்தரம், எஸ். நெடுமாறன், காமாட்சி, அன்பில்-தருமலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சேலம் :

10—11—57 இரவு 7 மணிக்கு, மஜீத் மன்றத்தைத் திறந்து வைத்து, தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் பேசியபின், பொதுக்கூட்டம் ஒன்று தோழர் மஜீத் தலைமையில் தொடங்கியது தோழர் சிற்றுளி-சுப்பிரமணியம் சிறிது நேரம் பேசியபின், தோழர் சிற்றரசு அவர்கள், தற்கால அரசியல் நிலைமைகளை விளக்கிப் பேசிக்கொண்டே இருக்கும்போது திடீரென மழை வந்ததன் காரணமாக கூட்டம் முடிவுற வேண்டியதாயிற்று; கூட்டத்தில் பல சங்கங்கள், படிப்பகங்கள் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன. கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் வந்திருந்தனர்.

சென்னை 16-வதுவட்டம்:

18—11—57 இரவு 7 மணிக்கு, மந்திரிக்கும் பிள்ளையார் கோயில் முன்பாக அமைக்கப்பட்டிருந்த பந்தலில் தோழர் கண்ணன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தலைவர், திருக்குறளில் பல மேற்கோள்கள் காட்டி உரையாற்றிய பின், தோழர் இன்மொழி சிறிது நேரம் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்.

பின்னர், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் சுமார் 2 மணி நேரம், இந்தியைக் கண்டித்தும், இன்றைய மாகாண சர்க்காரின் மௌன நிலையைக் கண்டித்தும் [illegible]

க. அன்பழகன்

எம்.எல்.ஏ. சுற்றுப்பயணம்

✶

திருக்கண்டீசுரம் :

தி. மு. க. கிளை துவக்கவிழா

17-11-57 மாலை 5-30 மணியளவில். மேற்படி விழா தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் கொடியேற்றுவிக்க, தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள் கழகக் கட்டிடத்தைத் திறந்து வைக்க மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அடுத்து, மாரியம்மன் கோவில் திடலில் தோழர் டி. என். சுந்தரம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் கே. ஆர். சபாபதி, வி. கிருஷ்ணமூர்த்தி, விவேகானந்தன் ஆகியோர் கழக வளர்ச்சியையும். இலட்சியத்தையும் விளக்கிப்பேசினர்.

பின்னர் பேசிய தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், சட்டமன்றத்தில் கழகம் ஆற்றிவரும் பணியை விளக்கி உரைத்தார்.

இறுதியாகப் பேசிய அன்பழகனார், 'முதுகுளத்தூர் நிகழ்ச்சி' பற்றிய விவாதத்தில் கழகம் கைக்கொண்ட நிலையையும், தேசியக் கௌரவத்தைக் காக்கக் கொண்டு வரப்பட்ட போலீஸ் சட்டத்தை எதிர்த்ததையும் விளக்கிப் பேசினார்.

தோழர் வாசுதேவன் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது தலைவர்களுக்குக் கைத்தறித் துண்டுகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

வல்லம் :

உதயசூரியன் படிப்பகப் பொதுக்கூட்டம்

18-11-57 மாலை 6-மணியளவில், மாரியம்மன் திடலில், தோழர் கோ. செல்வராசன் தலைமையில் படிப்பகக் கூட்டம் நடைபெற்றது. டாக்டர் எஸ். இராங்சாமி கழகக் கொள்கையை விளக்கிப் பேசினார். அடுத்து தோழர் அன்பழகனார் அவர்கள் தற்கால அரசியல் நிலையையும், கழகத்தின் பணியையும் விளக்கி நீண்டதொரு சொற்பொழிவாற்றினார்.

பல கிளைகளின் சார்பில் அன்பழகனாருக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன. செயலாளர் நன்றி கூறினார்.

தலைஞாயிறு :

முத்தமிழ் மன்ற ஆண்டுவிழா

19-11-57 மாலை 6-மணிக்கு டாக்டர் குலசேக்கண்ணு தலைமையில் மேற்படி விழா நிகழ்ந்தது. முதலில் குளித்தலை வேணுகோபால், மன்னை அறிவழகன் இருவரும் இயக்கப் பண் பாடினர்; அடுத்து, திருப்பூண்டி வீராசாமி பேசியபின், தோழர் அன்பழகனாருக்கு தலைஞாயிறு ஊராட்சி மன்றத்தின் சார்பில் துணைத் தலைவரும், கிராம முன்னேற்றச் சங்கத்தாரும் வரவேற்பிதழ் படித்தளித்தனர். பல கிளைக் கழகத்தார் கைத்தறி ஆடைகள் அணிவித்தனர்.

இறுதியாகத் தோழர் அன்பழகன் அவர்கள் தி. மு. கழகம் தமிழ்ப் பாதுகாப்புக்கு ஆற்றிவரும் தொண்டையும், மக்கள் கடமையையும் விளக்கி உரைத்தார். செயலாளர் ராசாக் நன்றி நவின்றார்.

திருமங்கைச்சேரி :

20-11-57 மாலை குத்தாலம் நிலையம் வந்தடைந்த தோழர் அன்பழகன் அவர்களை தோழர்கள் இரெ. மணியன், கோ. சி. மணி ஆகியோர் சந்தித்து கூட்டம் ஒத்திவைக்க நேர்ந்ததைக் கூறி வழியனுப்பினர். அன்பழகனார் சென்னை புறப்பட்டார்.

பேசியபின் செயலாளர் நன்றி கூறினார். கழகத்தின் சார்பிலும், பல சங்கங்கள், வள்ளுவர் படிப்பகம் ஆகியவை சார்பிலும் தோழர்களுக்குக் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன,

கே. ஏ. மதியழகன்

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

★

கீழக்காட்டூர் :

தி. மு. க. துவக்கவிழா

25—11—57 மாலை 5 மணிக்கு, குத்தாலம் அரங்கநாதன் குழுவினரின் இசைவிருந்திற்குப்பின்னர் தோழர் வைரம் தலைமையில் விழா ஆரம்பமாயிற்று.

தோழர்கள் கு. இராஜமாணிக்கம், கோ. சி. மணி, பி. ஏ. லிங்கன், என். அசோகன், புலவர் ஆறுமுகம் முதலியவர்கள் பேசிய பின்னர், தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் கழகக் கருத்துக்களை எடுத்துரைத்தார்.

அவருக்கு, பல கழகங்களின் சார்பிலும், மன்றங்கள் சார்பிலும் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

கூட்ட முடிவில் மூன்று குழந்தைகளுக்கு தோழர் மதியழகன் அவர்களால் முறையே 'உதயசூரியன்' 'குணாளன்' 'வெற்றிமணி' என்று பெயரிடப்பட்டது.

திருவம்பநல்லூர் :

26—11—57 காலை 8 மணிக்கு திருவம்பநல்லூரில் தோழர் என். அசோகன் பெண் குழந்தைக்கு தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களால் 'கயல்விழி' என்று பெயர் சூட்டப்பட்டது.

பந்தநல்லூர் :

அன்று காலை 10 மணிக்கு பந்தநல்லூர் தி. மு. கழகச் சார்பில் செயலாளர் பி. ஏ. லிங்கன், தோழர் மதியழகன் அவர்களை வரவேற்று மலர்மாலை அணிவித்த பின்னர், தோழர் மதியழகன் அவர்கள் கழகக் கொடியை ஏற்றி வைத்து வரவேற்புக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

சோழபுரம் :

மாலை 2 மணிக்கு சோழபுரம் தி. மு. கழகச் சார்பில் தோழர் எம். வைத்தியநாதன் தலைமையில் வரவேற்பு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். ஏ. துரை வரவேற்புரையாற்றியபின், தோழர்கள் பி. ஏ. லிங்கன், கு. இராஜமாணிக்கம், கோ. சி. மணி, என். அசோகன், புலவர் ஆறுமுகம் முதலியோர் பேசினர். இறுதியில் தோழர் மதியழகன் அவர்கள் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துவிட்டு நீண்டநேரம் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார். அவருக்குப் பல கழகங்களின் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

பிற்பகல் 2 மணியாக இருந்தாலும் ஏராளமான மக்கள் கூடியிருந்து, தோழர் மதியழகன் அவர்களின் கருத்துரையை ஆர்வத்துடன் கேட்டனர். கூட்டம் மாலை 5 மணிக்கு இனிது முடிவுற்றது.

அம்மன்பேட்டை :

மாலை 7 மணிக்கு அம்மன் பேட்டை தி. மு. கழகச் சார்பில் தோழர் பி. ஏ. லிங்கன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கு. இராஜமாணிக்கம், எஸ். ஏ. துரை, கோ. சி. மணி, என். அசோகன், புலவர் ஆறுமுகம் முதலியோர் பேசிய பின்னர் தோழர் மதியழகன் கழகக் கருத்துக்களை எடுத்துரைத்தார் அவருக்குப் பல கழகங்களின் சார்பில் மலர்மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

ஆண்டிமடம் :

27—11—57-ல், திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் விளந்தை—ஆண்டிமடம் தி. மு. க. ஆண்டுவிழா, திருமுட்டம் தி. மு. க. செயலாளர் தோழர் ஆர். நடேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பின், தோழர்கள் கன்னியன், கணபதி ராமசுப்பையா, ஜம்பு, பொன். சொக்கலிங்கம் ஆகியோர் பேசினர்.

தோழர் கே. ஏ. மதியழகன் பேசுவதற்குமுன்பு நெசவாளர் சங்கம், திருமுட்டம் தி. மு. க. மற்றும் ஏராளமான கழகங்களின் சார்பில் கைத்தறி ஆடைகளும் மலர்மாலைகளும் அணிவிக்கப் பெற்றன.

பிறகு தோழர் கே. ஏ. மதியழகன் நீண்டதோர் சொற்பொழிவாற்றினார். தோழர் அ. நடராசன் நன்றிகூறலுடன் விழா இனிது முடிவுற்றது.

'தகப்பன் தொழிலை பிள்ளை செய்யவேண்டும் என்பதில்லை'

'தொழிலுக்கொரு சாதி என்ற நிலை மாறவேண்டும்'

நவீன முறையில் துணிவெளுக்கும் சாதனம் ஏற்படுத்த சர்க்கார் முயற்சி

சேலம் சலவைத் தொழிலாளர் மாநாட்டில் தொழிலமைச்சர் பேச்சு

சேலம், டிச. 2—

சேலம் நகர சலவையாளர்கள் மாநாடு சேலத்தில் நேற்று திரு. எம். எத்திராஜுலு எம். எல். சி. தலைமையில் நடைபெற்றது; அவர் பேசுகையில் கிராமங்களில் சலவைத் தொழிலாளர்களில் பலர் உயர் சாதிக்காரர்களால் துன்புறுத்தப்படுவதாகவும், இதை அரசாங்கத்தார் தடுக்க வேண்டும் என்றும், சலவைத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலைச் செய்ய அரசாங்கத்தார் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் கல்வித்துறையில் முன்னேற சலவைத் தொழிலாளர்களுக்குப் போதுமான சலுகைகள் அளிக்க வேண்டும் என்றும் கூறினார்.

மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில சென்னை தொழில் இலாகா அமைச்சர் திரு. வெங்கட்ராமன் கூறியதாவது :—

"சலவைத் தொழிலாளி நகசுத்தித் தொழிலாளி முதலியவர்கள் தங்கள் குழந்தைகளும் தாங்கள் செய்யும் தொழிலையே செய்ய வேண்டும் என்று எண்ணுகிறார்கள்; தகப்பன் செய்யும் தொழிலையே மகனும் செய்ய வேண்டுமென்பதில்லை. முன்காலத்தில் ஒவ்வொரு தொழிலையும் ஒவ்வொரு பிரிவு மக்கள் செய்தனர். பிற்காலத்தில் ஒவ்வொரு தொழிலைச் செய்யும் மக்களையும் குறிப்பிட்ட சாதிப் பெயர்களால் அழைக்க ஆரம்பித்தனர். குறிப்பிட்ட சாதி குறிப்பிட்ட தொழிலைத்தான் செய்ய வேண்டுமென்பதில்லை. சலவைத் தொழிலாளர் சமூகத்தைச் சேராத சிலர் சென்னையில் சலவைத் தொழிற்சாலையை நடத்துவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

"சலவைத் தொழிலில் இன்னும் பழைய முறையையே கையாளக் கூடாது. நவீன இயந்திர முறைகளைக் கையாண்டு ஊதியங்களை பெருக்கிக்கொள்ள வேண்டும். துணிகளைக் கற்களில் அடித்துத் துவைப்பதற்குப் பதில் இயந்திர முறைகளில் வெளுக்கும் முறைகளைக் கையாளலாம்.

"சலவைத் தொழிலாளர் கூட்டுறவு சங்கம் ஒன்றை சென்னையில் பரீட்சார்த்தமாக ஆரம்பித்து நடத்த முடிவு செய்து அதற்கான நடவடிக்கைகளை சென்னை அரசாங்கம் செய்து வருகிறது. நவீன இயந்திரங்கள் அந்த சங்கத்தில் உபயோகிக்கப்படும். அந்தத் திட்டம் வெற்றியடைந்தால் ஜில்லாக்களுக்கும் தாலுகாக்களுக்கும் விரிவுபடுத்தப்படும்"

ஆரம்பத்தில் செயலாளர் எஸ். சி. இராஜு எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்.

தீர்மானங்கள்

சென்னை கவர்னர் ஜான், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், ஆச்சார்ய நரேந்திரதேவ் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், சென்னைக்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்கும்படி சென்னை அரசாங்கத்தை கேட்டுக்கொண்டும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கும் எல்லாச் சலுகைகளையும் சலவைத் தொழிலாளர்களுக்கும் கொடுக்குமாறும் புறம்போக்கு நிலங்களில் சலவை தொழிலாளிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின. (ந—நி.)

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக மாநாடு

தொண்டர் படைத் தலைவர்கள் வேண்டுகோள்

"நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாடு, நாகர் கோவிலில், கலைவாணர் பந்தலில், டிசம்பர் 27, 28 ஆகிய தேதிகளில் நடத்த முடிவு செய்திருப்பதால், தொண்டர் படையில் சேர்ந்து பணியாற்ற விரும்பும் தோழர்கள் அந்தந்த கிளைக் கழகச் செயலாளரின் கை ஒப்புதலுடன் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு, டிசம்பர் 15-ந் தேதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்"

என, தொண்டர் படைத் தலைவர்களான எஸ். வி. அப்பன், பி. எம். ஷா ஆகியோர் தெரிவிக்கின்றனர்.

முகவரி :—

எஸ். வி. அப்பன்,
தொண்டர்படைத் தலைவர்,
தி. மு. கழகம், பள்ளியாடி
கன்னியாகுமரி மாவட்டம்.

கூட்டுறவுப் பண்ணைமுறை

மக்கள் விரும்பினால் அமுல் செய்வார்களாம்!

"மக்கள் விரும்பினால் சில மாநில சர்க்கார்கள், கூட்டுறவுப் பண்ணை முறையை ஏற்றுக் கொண்டு அமுல் செய்யக்கூடும்" என்று கூட்டுறவு அமைச்சர் தேஷ்முக் தெரிவித்துள்ளார்.

தோரியம் சத்துள்ள மனேஸைட் மதிப்பீடு

பம்பாய், டிச. 3—

நாட்டில் தோரியம் சத்துள்ள மனேஸைட்டின் மதிப்பீடு சுமார் 20 இலட்சம் டன் என்று அணுசக்தி இலாகா பூதத்துவ ஆலோசகர் டாக்டர் டி. என். விசயா தெரிவித்துள்ளார்.

இழிவு நீங்குகிறதா?

தீண்டாமைபற்றி தத்தார்

ஜெய்பூர், டிச. 1—

தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 6 25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

தீண்டாமை இப்போது கிராமங்களில் மட்டுமே தலைகாட்டுகிறதாம்!

பொதுவாக சமுதாயத்தில் இந்த இழிவு நீங்கிவருகிறதாம்.

மத்திய அமைச்சர் தத்தார் தாழ்த்தப்பட்டோர் வார விழாவைத் துவக்கிவைத்துப் பேசுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியப் பேரரசின் எதேச்சாதிகாரம் அம்பலம்

கைத்தறித்துணி விற்பனைக்கழிவில் நடந்துகொண்ட தான்தோன்றித்தனம்

திட்டத்தைக் கைவிடக்கூடாதென சென்னை அமைச்சர் பிரார்த்தனை

சென்னை, டிச. 4—

"...5 இலட்சம் கைத்தறிகளையும், 20 இலட்சம் நெசவாளரையும் பாதிக்கக் கூடியது என்பது எனக்குத் தெரியும். "'தள்ளுபடி'யை அவசரமாகக் குறைத்தது தவறு என்றும், பழையபடியே இருக்க வேண்டும் என்றும் சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளது" என்று சென்னை தொழில் அமைச்சர் திரு. வெங்கட்ராமன், சேலத்தில் நடைபெற்ற மாவட்ட கைத்தறி நெசவாளர் மாநாட்டில் பேசியுள்ளார்.

சென்ற கிழமை சென்னைக்கு வந்திருந்த மத்திய வர்த்தக அமைச்சர் திரு. கனுங்கோ, "கைத்தறிக்குத் தரப்படும் தள்ளுபடி படிப்படியாகக்குறைக்கப்பட்டு, இன்னும் ஓராண்டுக் காலத்தில் முழுமையிலும் நீக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

சென்னை, டெல்லியுடன் கொண்டுள்ள தொடர்பின் விளைவை நன்கு புரிந்துகொள்ள இதுவும் ஒரு நல்ல சான்றாகும்!

தமிழ்நாட்டின் கவர்னர்

அசாம் முதன்மந்திரியின் நியமனம் உறுதியாம்!

ஷில்லாங், டிச. 3—

சென்னை மாநிலத்தின் புதிய கவர்னராக பிஷ்ணுராம் மெஹ்தியின் நியமனம் உறுதியாகிவிட்டதாம்!

அவர், இப்போது அசாம் மாநில முதன் மந்திரியாக இருப்பது தெரிந்ததே.

முதன் மந்திரி பதவியை, வரும் 21-ந் தேதியன்று இராஜிநாமாச் செய்துவிட்டு, இம்மாத இறுதிக்குள் தமிழ் நாட்டின் கவர்னராகப் பதவி ஏற்பாராம்.

உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் அவர், குணமடைந்துவருகிறார் என்றும் கூறப்படுகிறது.

அசாமிற்குப் புதிய முதன் மந்திரி

அசாம் மாநில முதன் மந்திரி பிஷ்ணுராம் மெஹ்தி தமிழ் நாட்டின் கவர்னராக நியமிக்கப்பட்டுவிட்டதால், அசாமின் புதிய முதன் மந்திரியாக பிமல பிரசாத் சலிஹா என்பார் நியமிக்கப்படுவாராம்.

டிசம்பர் 20-ந் தேதி கௌஹாத்தியில் நடைபெறும் சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் அவர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும், டெல்லி மேலிடத்துடன் கலந்தாலோசித்துக்கொண்டு மந்திரி சபை அமைப்பார் என்றும் கூறப்படுகிறது.

இலஞ்சக் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்ட ஐ.சி.எஸ். அதிகாரி

வெங்கட்ராமன் அப்பீல் தலைமை உயர் நீதிமன்றத்தில் தள்ளுபடி

புதுடில்லி, டிச. 2—

பஞ்சாப் உயர் நீதிமன்றம், இலஞ்சக் குற்றத்திற்காக தனக்குத் தந்த தண்டனைக்கு எதிராக எஸ். ஏ. வெங்கட்ராமன் என்ற ஐ. சி. எஸ். அதிகாரி (டெல்லி வர்த்தக தொழில் இலாகா செயலாளராயிருந்தவர்) தலைமை உயர் நீதிமன்றத்தில் தொடுத்திருந்த அப்பீல் வழக்கினை, அம்மன்றத்தின் அரசியல் சட்ட நீதிபதிக் குழு நிராகரித்துத் தள்ளுபடி செய்துள்ளது.

இதன்படி, பஞ்சாப் உயர் நீதிமன்றம் விதித்த இரண்டாண்டுக் கடுங்காவல் தண்டனையை அவர் அனுபவிக்கவேண்டியிருக்கும்.

சீனாவில் உற்பத்தி

அதிகரிப்பு நடவடிக்கை

"சீனாவில் உள்ளாட்சி மன்றங்களில் பணியாற்றும் 8,10,000 அதிகாரிகளும், நேரடியாக வயல்களில் வேலை செய்து உற்பத்தியை அதிகரிக்க அனுப்பப்பட்டுள்ளனர்" என்று சீனப் பொதுவுடைமை நாளிதழ் அறிவித்துள்ளது.

தமிழ் நாட்டிற்குக் கோதாவரி நீர்

மண்டலக் குழு விவாதிக்கும்

புதுடில்லி, டிச. 3—

வரும் டிசம்பர் 27-ந் தேதியன்று திருவனந்தபுரத்தில், தென்மண்டலக் குழுவின் மூன்றுவது கூட்டம் நடைபெறும்போது, ஆந்திர-சென்னை மாநிலங்களுக்கு இடையே உள்ள எஞ்சிய எல்லைத் தகராறுபற்றியும், கோதாவரி ஆற்றுநீரை சென்னை பயன்படுத்திக்கொள்வதுபற்றியும் விவாதிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

புதியம்புத்தூருக்குப் பொதுச்செயலாளர் வருகை

ஊராட்சி மன்ற வரவேற்பு

புதியம்புத்தூர், டிச. 3—

9—12—57-ல் இவ்வூருக்கு வருகை தரவிருக்கும் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு,அன்று மாலை 4மணிக்கு ஊராட்சி மன்றத்தின் சார்பில் வரவேற்பு அளிப்பதென மேற்படி ஊராட்சி மன்றத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நெல்லிக்குப்பம் தேர்தல் வழக்கு

திருச்சி, டிச. 4—

நெல்லிக்குப்பம் தேர்தல் வழக்கு 5—12—57 காலை 11-மணிக்கு திருச்சி தேர்தல் வழக்கு மன்றத்தில் (டிரிபியூனல்) நடைபெற இருக்கிறது.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

டிசம்பர்

6 : மாலை—சங்கரநயினார்கோவில்
இரவு—புளியங்குடி
7 : மாலை—அம்பாசமுத்திரம்
இரவு—வீரகேரளம்புதூர்
8 : காலை—திருநெல்வேலி
நண்பகல்-ஏரல் (திருமணம்)
மாலை—ஆத்தூர் (நெல்லை)
இரவு—உடன்குடி
9 : மாலை—புதியம்புத்தூர்
இரவு—சிவர்தையாபுரம்
10 : மாலை—முசவூர்
11 : மாலை—மணப்பாறை
இரவு—இடையாத்துமங்கலம்

46-வதுவட்ட தி. மு. க. வளர்ச்சி நிதிக்காக

5—1—1958 ஞாயிறு மாலை 6-மணிக்கு
தியாகராயநகர் வாணி மகாலில்

கலைஞர் மு. கருணாநிதி M.L.A., அவர்கள் தலைமையில்

சென்னை முத்தமிழ் நாடக மன்றத்தார் நடிக்கும்

'எதிரொலி'

(என்னும் சமூக சீர்திருத்த நாடகம் நடைபெறும்)

★

கதை, வசனம், பாடல்: டி. கே. தண்டபாணி

கட்டணம் : ரூ. 2, 1.

நெல்லையில் சிறப்புக் கூட்டம்

இரா. நெடுஞ்செழியன் கலந்துகொள்வார்.

★

8—12—57 காலை 9-மணியளவில், நெல்லை பாப்புலர் திரைப்பட அரங்கில், நகர தி. மு. க. நிதிக்காகவும், சேலம் தேர்தல் வழக்கு நிதிக்காகவும் ஓர் சிறப்புக் கூட்டம், வழக்கறிஞர் இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'இலக்கிய இன்பம்' என்ற பொருள்குறித்துச் சொற்பொழிவாற்றுவார்.

நாகூர் அனீபா இன்னிசையும் உண்டு.

கே. வி. கே. சாமி நினைவு நாள் — இந்தி எதிர்ப்புப் பொதுக் கூட்டம்

5—12—57 மாலை 6 மணிக்கு, சென்னை — சேப்பாக்கம் லாக் நகரில், சாமி படிப்பகச் சார்பில் கே. வி. கே. சாமி நினைவு நாளும், இந்தித் திணிப்புக் கண்டனக் கூட்டமும் நடைபெறும். தோழர் கா. அப்பாதுரை தலைமை வகிப்பார்; தோழர்கள் மு. கருணாநிதி எம்.எல்.ஏ., பி. எஸ் சந்தானம் எம்.எல்.ஏ., ஆ. வெ செயராமன், மா. பா. சாரதி, எம். கே. மணி ஆகியோர் பேசுவர். இரவு 9 மணிக்கு கலை நிகழ்ச்சி நடைபெறும்.

சென்னை 36-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு :

5—12—57 இரவு 7 மணிக்கு. சென்னை 36-வது வட்ட (வடக்குத் தியாகராயநகர்) தி.மு.கழகக் கிளையின் செயற் குழுக் கூட்டம், ஸ்டேஷன் பார்டர் ரோடிலுள்ள கழகப் பணிமனையில் தோழர் மா. இளங்கோ தலைமையில் நடைபெறும்; அதுபோது, பொதுக் கூட்டம் நடத்துவது பற்றியும், மாவட்ட உறுப்பினர் விலகல் பற்றியும் முடிவெடுக்கப்படும்.

தொழில் நீதிமன்ற முடிவுகளை எதிர்த்து

அப்பீல் செய்யும் உரிமை ?

"தொழில் நீதிமன்றத் தீர்ப்புகளைத் தொழில் நீதிமன்றங்களுக்கும், பிரதம நீதிமன்றங்களுக்கும் கொண்டு செல்வதைத் தடுக்க தொழில் சட்டத்தில் திருத்தம் செய்வதாக அரசாங்கத்திற்கு எண்ணம் இல்லை" என்று துணைத் தொழில் அமைச்சர் ஆபித் அலி மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

சின்னம்மாள்-பெரியசாமி திருமணம்

24—11—57-ல், சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்ட நரசிங்கபுரத்தில் தி. மு. க. செயலாளர் தோழர் என். என். பெரியசாமி, தோழியர் எம். சின்னம்மாள் திருமணம் தோழர் பி. வி. நாராயணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரனார் ('நம்நாடு' பொறுப்பாசிரியர்)வாழ்த்துரை வழங்கினார். நண்பர்களும், கழகத் தோழர்களும் பெருவாரியாக வந்து வாழ்த்துகளும், பரிசுகளும் வழங்கினர். வருகை தந்த அனைவருக்கும் மணமகன் தோழர் பெரியசாமி அவர்கள், இதயங்கனிந்த நன்றியை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறார்.

திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 10 நன்கொடையாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

ரூர்கேலா திட்டத்திற்கு இந்தியா வாங்கிய கடன்

தவணையைநீடிக்க மேற்குஜெர்மன் சர்க்கார் சம்மதம்

பான், டிச. 3—

மேற்கு ஜெர்மனிக்கு இந்தியா தரவேண்டிய கடனைத் திருப்பித் தருவதற்கான காலக் கெடுவை, ஜெர்மன் சர்க்கார் நீடித்திருப்பதாகத் தெரியவருகிறது.

ரூர்கேலாவில் ஜெர்மன் நிறுவனமான கிரப்ஸ் கம்பெனியார் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் இரும்பு-உருக்குத் தொழிற்சாலைக்காக வாங்கப்பட்ட கடன். இந்த ஆண்டு முதல் திருப்பித் தரப்படவேண்டும்; ஆனால் இப்போது ஜெர்மன் சர்க்கார், இந்தக் கடனை, 1961-ம் ஆண்டு வாங்கிக்கொள்ளச் சம்மதித்திருக்கின்றனர்.

கடன் 60 கோடி மார்க்ஸ் (அதாவது 5 கோடி பவுன்) என்றும், இந்தத் தொகையைத் திருப்பித் தருகிற தவணையை நீடிக்கவேண்டும் என்பதற்காக இந்தியாவின் நிதி இலாகா செயலாளர் தலைமையில் தூதுக் குழு ஒன்று மேற்கு ஜெர்மனி சென்று பேச்சுவார்த்தை நடத்துகிறது என்றும், அதன் விளைவாகவே மேற்கு ஜெர்மன் சர்க்கார் இந்த முடிவை மேற்கொண்டிருக்கின்றனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

'அவள்' அவர் ஆகிறார்!

"சென்னை நகர சரித்திரத்திலேயே முதன் முதலாக ஒரு பெண், (தாரா-செரியன் அம்மையார்) மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்.

"ஆணுக்குப் பெண் பின்வாங்கியவளல்ல என்று தாரா அம்மையாரால் நிரூபிக்க முடியும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை!

"சென்னை நகர நிர்வாகத்தின் பொறுப்பை ஏற்றுள்ள அந்தப் பெண்மணியைப் பாராட்டி, அவருடைய பதவி காலத்தில் நகரத்துக்கு நல்லது ஏற்படும் என்று நம்புகிறோம்."

—'தினத் தந்தி' : 4-12-57

கிராம அதிகாரிகளின் குழந்தைகளுக்கு வசதி

விசாரணைக் குழு சிபாரிசு

கிராம அதிகாரிகளின் குழந்தைகளுக்கு 6-வது படிவம் வரை இலவசக் கல்வி, வைத்திய உதவி, பிரயாணப்படி முதலியன அளிக்கப்பட வேண்டும் என்று ஆந்திர அரசு நியமித்த கிராம அதிகாரிகள் நிலை விசாரணைக்குழு சிபாரிசுகள் செய்துள்ளது.

சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றப் பொதுக்கூட்டம்

5—12—57 மாலை 6 மணிக்கு, சென்னை — இராயபுரம் அம்மன் கோயில் எதிரில், சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் சச்சிதானந்தம் தலைமை வகிப்பார். தோழர்கள் சி. பி. சிற்றரசு, என். சீவரத்தினம், அன்பு ரோசு, சி. இளங்கோ ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

பல் தொழிலியற் கல்லூரி தமிழ் மன்றம்

4—12—57 மாலை 4-30 மணியளவில், சென்னை மத்திய பல் தொழிலியற் கல்லூரி (சென்ட்ரல் பாலி டெக்னிக்) தமிழ் மன்றத் துவக்க விழா கல்லூரி மண்டபத்தில் கல்லூரி முதல்வர் கே. சீனிவாசன் தலைமையில் நடைபெறும். முதலமைச்சர் காமராசர் துவக்கி வைப்பார். தோழர்கள் க. அறிவழகன், மா. நன்னன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

29—12—57 ஞாயிறு அன்று நாகர் கோயிலில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும்.

'அறிவகம்' சென்னை
2—12—57 } தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.